RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt222323

OPEN ACCESS

# கலைகளின் பரிணாம வளர்ச்சி: குறவஞ்சி நாட்டிய நாடகம்

நா. கவிதா [அ, *] எம். எஸ். சரளா [அ]

[அ] நுண்கலைத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா

# The Evolution of the Arts: Kuravanchi Dance Drama

N. Kavitha [a, *], M.S. Sarala [a]

[a] Department of Fine Arts, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: peacefonder1978@gmail.com

Received: 21-02-2022
Revised: 30-04-2022
Accepted: 08-05-2022
Published: 06-07-2022

Check for updates

**ABSTRACT**

No matter or energy can be created or destroyed. The law of physics is that it can only be transformed into another object or energy. It applicable to the arts also. Art can never suddenly emerge anew. It is influenced by different arts over a while and takes on the appearance of another art based on needs. Therefore, Evolution is the development of another art under the influence of other arts. Thus, the literary art of Kuravanchi has evolved into the art of drama coupling with the arts of music and dance. The purpose of this article is to analyze the organization of the Kuravanchi dance dramas and to observe whether the traces of the above arts can be found in them.

**Keywords:** Kuravanchi Dance, Drama, Kuravanchi, Music

## முன்னுரை

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி நம் தமிழ் மொழி. அத்தகைய சிறப்பு வாய்ந்த மொழியை பெற்ற நம் தமிழ் குடி எண்ணற்ற ரசனை மிக்கவர்களாகவும் அதனால் எண்ணற்ற கலைகளை உருவாக்கி தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக மாற்றி பேணி காத்து வந்தனர் என்பது வரலாற்று உண்மை. அத்தகைய கலைகளுள் ஒன்று தான் இந்த குறவஞ்சி நாட்டிய நாடகம். ஒரு கலை மற்ற கலைகளுடன் இணைந்து அழகு சேர்ப்பது இயற்கை. அதுபோல சிற்றிலக்கிய வகையான குறவஞ்சி மற்ற கலைகளான இசை மற்றும் நாட்டியத்துடன் இணைந்து நாடக கலையாக பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன. அவ்வாறு உருவாகும் கலை அதன் அடிப்படை வடிவம் மாறாமலும் எக்கலையாக மாறுகிறதோ அதன் அடிப்படை வடிவத்தையும் பெற வேண்டும். இதுவே பரிணாம வளர்ச்சியாகும். இங்கு பரிணாம வளர்ச்சி என்பது குறவஞ்சி இலக்கியத்திலிருந்து எவ்வாறு அது நாட்டிய நாடகமாக வளர்கிறது என்பதைக் குறிக்கிறது (Subramaniyan, 1998). அத்தகைய நிகழ்வு இக்கலையில் நடந்து முழுமையான கலையாக மாறியிருக்கிறதா என்பதை ஆய்ந்து தெளிவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. இக்குறவஞ்சி நாட்டிய நாடகம் பல கலைகளின் ஒருங்கிணைந்த அமைப்பாக இருப்பதால் கலை அதன் வரையறை, எல்லை, தன்மை, விளைவு, வகைப்பாடு, குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி, குறவஞ்சி நாடகத்தின் இலக்கியமைப்பு, இசையமைப்பு, மற்றும் நாடக அமைப்பு போன்றவற்றை ஆராய்ந்து அவை முழுமையான வளர்ச்சியை அடைந்துள்ளனவா என்பதை அறிவதே இவ்வாய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகிறது.

## கலை

கலை குறித்து எண்ணற்ற தத்துவ அறிஞர்களும் கலையார்வலர்களும் தங்களுக்கே உரித்தான பாணியில் அதன் வரையறையை விவரித்துள்ளனர்.

நாமக்கல் கவிஞர்: "கலை என்றால் உணர்ச்சிகளைக் கவ்வ வேண்டும், களிப்பூட்டி அறிவினைப் போய் கவ்வ வேண்டும்". க. காந்திதாசன் தன் "சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல்" என்ற புத்தகத்தில் கலைகளின் பல்வேறு பண்புகளை, கலை உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடு, மனிதனின் ஆறாம் அறிவிற்கு எடுத்துக்காட்டு, மனிதனின் அனைத்து கண்டுபிடிப்புகளுக்கும் மூலம், நாகரிகத்தின் தொட்டில், கற்பனையும் இயற்கையும் ஒன்று கலக்கும் நிகழ்வு, உணர்வுகளைத் தூண்டும் ஆற்றல், மனங்களையும் இனங்களையும் இணைக்கும் ஒற்றுமையை வளர்க்கும் கவலைகளை மறக்கச் செய்யும் படைப்பே கலை. ஏ.சி. பிராட்லி: கலை ஒரு தனி உலகம், அதனை அனுபவிக்க தொடங்குகிற போது புறவுலகு நினைவே சிறிதும் வரலாகாது. கற்பனையின் துணையுடன் கவிதை, சில அனுபவங்களை வெளியிடுகின்றது. அவற்றை நாமும் அப்படியே பகிர்ந்து கொள்ளலாமே தவிர வேறு பயன் தேடக்கூடாது. அவ்வாறு தேடினால் கவிஞன் என்ன கருதி அதனை ஆக்கினானோ, அதனை நாம் இழந்துவிடுவோம். இன்ப அனுபவம் தவிர வேறு பிற எல்லாம் இரண்டாம் நிலையானவை முக்கியமானவை அல்ல. கலையைக் கலைக்குள்ளிருந்து பார் கலையாக பார் வேறொன்றையும் பார்க்காதே. ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்: (திறனாய்வாளர்) இலக்கியம் என்பது மனித சமுதாயத்தின் மனச்சான்று. கலை மனித சமுதாயத்தின் மகிழ்ச்சிக்கு உதவுமானால் ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை பெறச் செய்ய உதவுமானால், அது சிறந்த கலையாகும். டால்ஸ்டாய்: கலை உணர்வின் வெளிப்பாடு அது உணர்வை வெளிப்படுத்துவதுடன் பிறர்க்கும் அவ்வுணர்வை ஏற்படுத்தும் பெருமையுடையது. இரவீந்திரநாத்தாகூர்: கலை, அழகுணர்ச்சி ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுவதும் இறை அனுபவத்தை அளிப்பதுமாக அமைந்தது நம் கலைக்கேயுரிய தனித்துவம் எனவும் கலைக்கருத்தின் உறைவிடம் அழகின் பிறப்பிடம் இன்பம் அதன் பயன். டாக்டர் துளசி. இராமசாமி: தமிழகக் கலைச்செல்வங்கள் என்ற புத்தகத்தில் கலையின் தோற்றத்தில் மூன்று கூறுகள் இருந்திடக் காண்கின்றோம் (Ramasamy, 1990). கலை பிறப்பதற்கு முதலில் வேண்டுவது தூண்டுதல். இத்தூண்டுதலை ஏற்றுக் கலையை உருவாக்குகிற அறிவுள்ளம் இரண்டாவது கூறு, அவ்வுயர்ந்த அறிவில் மலர்ந்த கருத்துக்களையும் அனுபவங்களையும் வெளிப்படுத்துவது, மூன்றாவது கூறு. எந்த கலையாயினும் அது உருவாக ஒரு தூண்டுதல் அமைய வேண்டும். அத்தூண்டுதல் காரணமாக சிந்திக்கும் அறிவு கலையைத் தோற்றுவிக்கிறது.

## கலைகளின் வகைப்பாடு

திருமூலரின் திருமந்திரத்தில் கலைமகள் வணக்கப் பாடலில் கலைகளின் வகைப்பாடு குறித்து கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய உருப்பளிங்கு போல்வாள் என உள்ளத்தினுள்ளே இருப்பளிங்கு வாராது இடர்"

இதன் மூலம் கலைகள் 64 என்பது அறியப்படுகிறது. அவற்றை கலைகளின் தன்மை அடிப்படையாக கொண்டு 5 முக்கிய வகையாக பிரிக்கலாம். அவையாவன 1) நுண்கலை 2) பயன்கலை 3) பருண்மைக் கலை 4) கவின்கலை 5) நிகழ்த்துக்கலை. நுண்கலை: நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது. கவிதை, இசை, ஆடல், ஓவியம் ஆகியவையை நுண்கலையாகக் கொள்ளலாம். பயன்கலை: பயன்களை முக்கிய நோக்கமாகக் கொண்டது. உதாரணமாக கட்டிடக்கலையைக் கொள்ளலாம். பருண்மைக்கலை: பருப்பொருள்களான ஊடுபொருள்களைக் கொண்டு அமைவது. சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலை போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். கவின்கலை: அழகான தோற்றத்தை நோக்கமாகக் கொண்டது. ஓவியம், ஒப்பனை போன்றவை இவ்வகையின் கீழ் அமையும். நிகழ்த்துக்கலை: பார்வையாளர் மத்தியில் நிகழத்திக் காட்டப்படும் கலை ஆகும். ஆடல், கூத்து, இசை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு கலை மற்ற கலையுடன் ஒருங்கிணைந்து புதிய கலைகளை உருவாக்கும் தன்மையுடையது.

## கலையின் நோக்கம்

1. சமூக மக்கள் தொடர்பு
2. பொழுதுபோக்கு
3. அரசியல் மாறுபாடு
4. சமூக விளைவுகள்
5. மனநல சீர்படுதல்
6. வர்த்தகமயமாக்கல்
7. ரசனை கவர்தல்

இளங்கோவடிகள்: அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்று ஆவதூஉம், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம் இம்மூன்று உண்மைகளை பறைசாற்ற "நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்" என்று கூறுவதிலிருந்து கலையின் பயன்களை அறியலாம்.

அலைந்து திரியும் மனவோட்டத்தை தன்பால் ஈர்த்து நிலைக்கச் செய்து அதனுள் புதைந்துள்ள அறிவை விளக்குவதே கலையின் பயனாகக் கொள்ளலாம்.

எனவே மேற்கண்ட கருத்துக்களை ஆய்வு செய்ததில் இலக்கியம் ஒரு நுண்ணறிவு கலை வகை என்பதும் நாடகக் கலை ஒரு நிகழ்த்துக்கலை என்பதும் புலனாகிறது. குறவஞ்சி என்ற இலக்கியம் நுண்ணறிவு கலை எவ்வாறு குறவஞ்சி நாட்டிய நாடக நிகழ்த்துக்கலையாக உருவெடுக்கிறது என்பதை இனி காண்போம்.

மேலும் கலைகள் ஐந்து புலன்களால் உள்ளிழுக்கப்பட்டு அவனது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்க வல்லது. கலைகள் இருவிதமான நபர்களிடம் தாக்கங்களை உருவாக்க வல்லது. அவர்கள் 1. படைப்பவர், 2. ரசிப்பவர். படைப்பவர் ரசிப்பவரின் மனநிலை அறிந்து படைப்பார், ரசிப்பவர் படைப்பவரின் தொழில் நுட்பத்தை அறிந்து ரசிப்பர். அதனால் புலனுறுப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே ரசிப்பவரின் மன நிலை அமையும். ஒரு கலை ஒன்றிற்கு மேற்பட்ட புலனுறுப்பு பயன்படுத்தும்படி அமைத்தால் அதனால் உண்டாகும் மனபிம்பம் (உண்மைத் தன்மை) மிகத் தெளிவாக அமையும். அதனால் அக்கலை மிக நேர்த்தியாக அமையும். அது அக்கலையின் வளர்ச்சியாகக் கொள்ளப்படும்.

## குறவஞ்சி நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

குறவஞ்சி நாட்டிய நாடகம் இயலாகிய இலக்கியத்திலிருந்து தோன்றி அவற்றிற்கு இசை வடிவம் கொடுக்கப்பட்டு, பின்பு நாடக வடிவில் மக்களை சென்றடைந்தது எனலாம். இலக்கியத்தை இருவகையாக பிரிக்கலாம், அவை பேரிலக்கியம் மற்றும் சிற்றிலக்கியம். பேரிலக்கியம் என்பது ஒரு மனிதனின் முழு வாழ்க்கையைச் சித்தரிப்பதாக இருக்கும் உதாரணமாக இராமாயணம் இராமரின் முழு வாழ்க்கையைச் சித்தரிப்பதாக உள்ளது. அதாவது அளவில் பெரிதாக இருக்கும். பின்வரும் காலங்களில் சமுதாய மாற்றத்தின் காரணமாகவோ, மக்களின் ரசனை மாற்றத்தின் காரணமாகவோ, முந்தைய இலக்கியத்தில் உள்ளதை தனி இலக்கியமாக ஆக்க வேண்டும் என்ற படைப்பாளிகளின் உள சிந்தனை காரணமாகவோ சிற்றிலக்கியம் தோன்றியிருக்கலாம். தொல்காப்பியத்தில் தலைவி தலைவன் ஒருவனைக் காதலிக்கின்றாள் அவர்கள் இடையே பிரிவு ஏற்படுகின்றது. தலைவனைக் காணாததால் தலைவி மனம் வருந்துகின்றாள். உடலும் உள்ளமும் வாடிக் காணப்படுகின்றாள். தலைவியின் இந்த நிலையைச் செவிலித்தாயும் நற்றாயும் காண்கின்றனர். தலைவியின் இந்த நிலைக்கு உரிய காரணத்தை அறிய கட்டு, கழங்கு, வெறியாடல் ஆகியன மூலம் குறிபார்க்கின்றனர். கட்டு என்பது

முறத்தில் நெல்லை பரப்பி வைத்து நெல்லை எண்ணி குறி பார்ப்பது ஆகும். வேலன் சுழற்சி காய்களை போட்டு குறி சொல்லுவான். அகவன் மகள் பாடிக் குறிச் சொல்லுவாள். இவ்வாறு தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இந்த சிறு பகுதி பிற்காலத்தில் குறம் என்ற சிற்றிலக்கியமாக மாறுவதற்கு தோற்றுவாயாக அமைந்துள்ளது. பன்னிரு பாட்டியலில் கலம்பகத்தின் ஒரு உறுப்பாக இருந்த குறம் ஒரு சில நூற்றாண்டுகளுக்குள் தனித்த ஓர் இலக்கிய வகையாக குறத்திப் பாட்டாக வளர்ந்திருக்கிறது. குறத்தி பாட்டுக்கு இலக்கணம் இருந்தாலும் இலக்கியம் இல்லை. ஆனால் குறத்திற்கு ஏராளமான இலக்கியம் உள்ளது. 18 நூல்கள் உள்ளது. உ.ம். மீனாட்சியம்மை குறம். இவ்வாறு உருவாகிய சிற்றிலக்கியம் 14 வகையாகப் பிரிக்கப்படுகிறது அவற்றில் உலா, தூது, குறம், கோவை ஆகியவையை இணைத்து குறவஞ்சி இலக்கியம் என்ற புது அமைப்பு உருவாகியது. பின்பு இவை குறத்திப்பாட்டு என்று வழங்கினர். தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவைச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோறாம் நூற்றாண்டில் சதகமாகவும், பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் பள்ளுவாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாக கனிந்தது என்று ந.வி. ஜெயராம் தனது சிற்றிலக்கிய வரலாற்றை குறிப்பிடுகிறார். ஒரு புறம் சிற்றிலக்கிய வளர்ச்சி அதேவேளையில் மறுபுறம் தலைவர்களை, மன்னர்களை புகழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட குளுவ நாடகத்தின் வளர்ச்சி இவையிரண்டுமே குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளன எனலாம்.

## குளுவ நாடகம்

குறம், குறவஞ்சிக்கு அடுத்த நிலையில் தோன்றுவது குளுவ நாடகமாகும். குளுவ நாடகம் 17ம் நூற்றாண்டில் தோன்றியதாக இலக்கிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அக்காலக்கட்டத்திலேயே நொண்டி, பள்ளு போன்ற நாடகங்களும் புழக்கத்தில் இருந்துள்ளன. ஐந்து வகையான குளுவ நாடகங்கள் இருந்துள்ளமையை டாக்டர் நிர்மலா மோகன் குறவஞ்சி இலக்கியம் என்ற தனது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1. சின்ன மகிபன் குளுவ நாடகம்
2. அருணர்சலம் குளுவ நாடகம்
3. கறுப்பர் குளுவ நாடகம்
4. கோட்டுல் கலியனார் குளுவ நாடகம்
5. ஏழு நகரத்தார் குளுவ நாடகம்

குறத்தியை பிரிந்த குறவன் தனது வேட்டைத் தொழிலை சிறப்புற செய்யாமல் தோல்வியுறுகிறான் இக்குறையைத் தீர்க்கும் வகையில் குளுவ நாடகம் தோன்றியது என்பர் (Perumal, 1980). இதில் குளுவனை மையமாகக் கொண்டது. குறி சொல்லும் காட்சி குளுவ நாடகத்தில் இல்லை. ஆனால் குறவஞ்சி குறத்தியை மையமாக கொண்டது. இரண்டுமே 18ஆம் நூற்றாண்டில் அரசர், ஊர் பெரியவர்கள், கடவுள் போன்றவர்களை புகழ்வதற்காக உருவாக்கப்பட்டவை. குளுவ நாடகங்கள் அளவில் குறைவாக தோன்றியிருப்பதாலும் அவற்றின் கதை குறவஞ்சியிலும் வந்திருப்பதால் இவ்விரண்டும் தொடர்புடையதாக தோன்ற வழிவகை செய்கிறது.

எனவே பண்டையத் தமிழ்நாட்டில் பரவியிருந்த குறத்திப் பாட்டு உலாவிலக்கியத் தாக்கம் பெற்று குளுவ நாடகத்துடன் இணைந்து கலிவாணரின் கற்பனைத் திறனால் வளம்பெருகக் குறவஞ்சி நாடகமாக உருவம் கொண்டு விளங்குவதாக கூறலாம் என்று என். பெருமாளின் தமிழ்நாடகம் ஓர் ஆய்வு என்ற புத்தகத்தில் குறவஞ்சி நாடகத்தின் தோற்றம் பற்றி சிந்தித்து உள்ளனர் (Perumalm 1979). பன்னிரு பாட்டியல் இயற்றப்பட்ட காலத்து குறத்திப் பாட்டு ஒரு வகை பிரபந்தம் மட்டும் வழங்கிவந்ததென்றும் அதனை பின்பற்றி ஒரு உறுப்பும் கலம்பகத்துக்குள்ளே அமைக்கப்பட்டதென்றும் அவ்விரண்டையும் தழுவி இசைப்பாட்டும் கலந்து குறமென்றும் பிரபந்தம் எழுந்ததென்றும் அவற்றைப்

பின்பற்றி நாடகமுறையில் குறவஞ்சி என்றும் பிரபந்தம் இயற்றப்பட்டதென்றும் கூறலாம் என்பது டாக்டர் உ.வே. சாமிநாதரின் கருத்து.

ஒரு கலை இன்னொரு கலையாக பரிணமிக்க தேவையானவை தூண்டுதல் அல்லது தேவை என்று முன்பே கண்டோம். எத்தகைய தேவை இக்குறவஞ்சி இலக்கியத்தை குறவஞ்சி நாட்டிய நாடகமாக மாற்றியது என்பதை காண்போம். "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்பது வள்ளுவர் வாக்கு. அதன் அர்த்தம் ஒரு மனிதன் பிறர்க்கு தேவையான ஒன்றை கொடுக்க வேண்டும் அதன் மூலம் இசைபட வாழ வேண்டும் அது இல்லாமல் வாழ்க்கையில் வேறொன்றும் இல்லை என்பதே ஆகும். வள்ளுவர் ஏன் புகழ்பட வாழ வேண்டும் என்று கூறாமல் இசைபட வாழ வேண்டும் என்று கூறியிருக்கிறார் என்றால், அக்காலத்தில் மன்னர்கள் கலைஞர்களுக்கு ஈகை செய்வதையே வழக்கமாக கொண்டனர். இதை அக்கலைஞர்கள் தன் பாடலுக்குள் புகுத்தி அத்தகைய புரவலர்களின் புகழ் பரப்பினர். ஆதனால் இசைபட வாழ வேண்டும் என்றார். எனவே அன்றைய காலக்கட்டத்தில் நாட்டிய நாடகம் மிகவும் பிரபலமான வேளையில் அக்கலையிலேயே தனது புரவலர்களின் புகழ் பாட வேண்டும் அல்லது இறைவனின் புகழ் பாட வேண்டும் என்ற சமூக சிந்தனையை தேவையின் அடிப்படையாக கொண்டு தேவரடியார்கள் இக்குறவஞ்சி இலக்கியத்தை கையிலெடுத்து தங்களின் இசை மற்றும் நடனம் ஆகியவற்றை இணைத்து இசை நாடக வடிவம் கொடுத்து மக்களிடையே இறை பக்தி மற்றும் சமூகத்தில் பெரியவர்களின் புகழைப் பரப்பினர். இந்த குறவஞ்சி நாட்டிய நாடகம் 18ஆம் நூற்றாண்டில் மிகப் பிரபலமாக பல கோயில்களின் திருவிழாக் காலங்களில் ஆடப்பெற்றும் நடிக்கப்பெற்றும் வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் கதை பொது அமைப்பு

குறவஞ்சி நாட்டிய நாடகம் இரு கதை அமைப்புகளை கொண்டது. முதலாவது பகுதியில் தலைவனாகிய தெய்வமோ அல்லது மானிடரோ உலா வருகிறார். அவர் உலா வரும் வீதியில், விளையாடும் தலைவி அவரை காண்கிறாள் அவர் மீது காதல் கொள்கிறாள், அவர் மீது கொண்ட காதல் மிகுதியால் தன் ஆற்றாமையைத் தோழியிடமும் நிலவிடமும் தென்றலிடமும் சொல்லி புலம்புகிறாள். தன் தோழியை தனக்காக தூது போக வேண்டுகிறாள். அப்போது குறி சொல்லும் குறத்தி அங்கு வருகிறாள். அவள் தனது தேசத்தின் வளம், மலைவளம் ஆகியவற்றை கூறுகிறாள். பின்பு தலைவியின் கைக்குறி மற்றும் மெய்க்குறி ஆகியவற்றை பார்த்து நினைத்த காரியம் கைகூடும், நீ நினைத்த தலைவனே உன்னை வந்தடைவான் என்று கூறி பரிசு பெற்று செல்கிறாள்.

குறவஞ்சி நாடகத்தின் இரண்டாம் பகுதி குறத்தி அவளுடைய கணவன் குறவன் மற்றும் அவனுடைய நண்பன் ஆகியோரைப் பற்றியதாக இருக்கும். குறவன் வேட்டையாடுவதும் அதற்கு அவனுடைய நண்பன் உதவுவதும், பின்பு அவனுக்கு குறத்தி நினைவு வந்து தேடி அலைகிறான். பரிசு பெற்ற குறத்தி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து வருவதைப் பார்க்கிறான் குறவன். அவளிடமுள்ள அணிகலன்களைப் பார்த்து அவள் மீது சந்தேகம் கொள்கிறான். பின்பு அவனின் சந்தேகத்தை தீர்த்து குறத்தி அவனுடன் இணைகிறாள். நாடகம் முற்று பெறுகிறது.

மேற்கண்ட கதையமைப்பைக் கொண்டு குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் பொது அமைப்பை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. காப்பு பாடல்
2. தோடையம்
3. மங்களம்
4. கட்டியக்காரன் வருகை
5. தலைவனின் பவனி
6. தலைவி வருதல்
7. தலைவியின் வருணனை
8. தலைவனின் பவனி கண்டு தலைவி காமுறுதல்

9. தலைவி மன்மதனைப் பழித்தல்
10. தலைவி தென்றலைப் பழித்தல்
11. தலைவி நிலவைப் பழித்தல்
12. பாங்கி வருதல்
13. பாங்கி தூது போதல்
14. குறத்தி வருகை
15. குறத்தி இயல்பு
16. தலைவி குறத்தியை அழைப்பித்தல்
17. குறத்தி தேசவளம், மலைவளம், நதிவளம், சாதிவளம், ஊர்வளம் கூறுதல்
18. குறத்தி தலைவிக்கு குறி சொல்லுதல்
19. தலைவன் தலைவியை மணந்தருள்வான் எனக் குறத்தி கூறல்
20. சிங்கன் குளுவனோடு வேட்டைக்கு வருதல்
21. வலையமைக்கும் முறை கூறல்
22. குறவன் குறத்தியின் பிரிவாற்றாமையால் வருந்துதல்
23. குறவன் குறத்தியைக் காணல்
24. குறத்தி குறவன் உரையாடல்
25. பாட்டுடைத் தலைவனை வாழ்த்திப் பாடல்

## இசை

இசை என்று எடுத்துக் கொண்டால் குறவஞ்சி நாட்டிய நாடகம் பாகவத நாடகம் மற்றும் ரஸ்டிக் நாட்டிய நாடகத்திற்கு இடைப்பட்டது. நாடகத்தின் முதல் பகுதி கர்நாடக இசை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டும், அதன் இரண்டாம் பகுதி நாட்டுப்புறப்பாடல் அதிக அளவிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறத்தி வரும் இடங்களில் ஜதி ஸ்வரங்கள் பயன்படுத்தப்பட்டு நடன சூழ்நிலைகளை அலங்கரிக்கின்றன. குறவஞ்சி நாட்டிய நாடகம் காப்பு தோடையம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகிறது. அவை பெரும்பாலும் கம்பீர நாட்டை ராகத்தில் நட்டுவாங்கனார் அவர்களால் பாடுவதாக அமைகிறது. அதே மாதிரி இறுதியாக அமையும் மங்களம் பந்துவராளி ராகத்தில் அமைக்கப்படுகிறது. திருக்குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் வசந்தவல்லி வருகைக் குறிக்கும் பாடலான “வங்காரப் பூசணம்” என்று துவங்கும் பாடல் கல்யாணி ராகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அவளின் அழகை கூறும் பாடலான “இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு” பைரவி ராகத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு நாடகத்தின் சூழ்நிலைக்கும் அதன் உணர்வு வெளிப்பாட்டிற்கும் தேவையான ராகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும். நாட்டியமாக ஆடப்பெறும் குறவஞ்சிகளின் கதைகளுக்கும் கதாபாத்திரத்திற்கும் அலங்கரிக்கும் வகையில் பாடல்களின் இடையிடையே சொற்கட்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்கும். ஆதிதாளம், மிஸ்ர சாபு மற்றும் திஸ்ர, ஏக தாளம் ஆகிய தாளங்கள் நாடகங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நாடகத்தின் சூழ்நிலைகளுக்குகேற்ப தாளத்தின் கால வேகம் அமைக்கப்பட்டிருக்கும். குறவன் குறத்தி பாடல்கள் திஸ்ர ஏக தாளம் அல்லது சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்தில் அமைக்கப்பட்டிருக்கும். அவை மலை ஜாதி பெண்ணான குறத்திக்கு எடுப்பாக அமைகிறது.

## இசை வாத்தியங்கள்

முகவீணை பெரும்பகுதியான குறவஞ்சி நாட்டிய நாடகங்களில் பயன்படுத்தப்பட்டன. தும்பி, மிருதங்கம், சிஞ்சா ஆகிய கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. வாய்ப்பாட்டு நட்டுவாங்கனாரால் பாடப்பட்டது (Gnaanaa Kulendran, 2005).

## குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் காணப்பெறும் இலக்கிய அமைப்பு

இலக்கியம் என்பது இலக்கணத்திற்கு உட்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட இலக்கிய பாடல் அமைப்பு குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. விருத்தம்
2. கலித்துறை
3. கண்ணிபாட்டு
4. கொச்சம்
5. கீர்த்தனை
6. அகவல்
7. கலிவிருத்தம்
8. ஓரடி கீர்த்தனை
9. சிந்து
10. கொச்ச கலிப்பா
11. கும்மி கண்ணி
12. வெண்பா
13. கலித்துறை
14. ஆசிரியப்பா
15. கட்டளை கலிப்பா

## குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் காணப்பெறும் நாடக கூறுகள்

நாடகத்திற்குரிய ஐவகை கூறுகளான பகுதி பிரிவு, கதாபாத்திர அமைப்பு, உரையாடல்கள், உணர்வூட்டும் இசை, எட்டு வகையான சுவைகள் போன்றவை குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் இடம்பெற்றுள்ளன.

**பாத்திரங்கள்:** தலைவன், தலைவி, குறத்தி, குறவன், குறவனின் நண்பன்

**பிரிவு:** இரண்டு பகுதியாக அமைக்கப்பட்டுள்ளன

**சுவைகள்:** அவலம், நகைச்சுவை, வியப்பு, அச்சம், இளிவரல், பெருமிதம், வெகுளி, உவகை

## முடிவுரை

குறவஞ்சி நாட்டிய நாடகம் குறவஞ்சி என்ற சிற்றிலக்கிய வகையிலிருந்து தோன்றியது என அறிய முடிகிறது. எனவே அப்பண்பு இந்த நாடகத்தில் உள்ளனவா என்பதை பார்ப்போம். நாடகத்தின் முதல் பகுதியில் தலைவன் உலா வருகின்றான் தலைவி தலைவனை கண்டு காதல் கொண்டு அவனை சேர மனம் ஏங்குகிறாள், இதை கண்ட அவளின் தோழி ஆறுதல் கூற, குறத்தி வந்து குறி சொல்லுகிறாள் அத்தோடு முதல் பகுதி முடிவடைகிறது. அவர்கள் சேர்ந்து வாழ்வதை காட்டியிருந்தால் அது பேரிலக்கியமாக மாறிவிடும் எனவே வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் சொல்வதால் அது சிற்றிலக்கியமாக உள்ளது என்பதை இது உறுதிபடுத்துகிறது. அவ்விலக்கியத்தில் கையாண்ட இலக்கிய அமைப்பு உலா, தூது, குறம் போன்றவை இவற்றிலும் இருப்பதாக அறிய முடிகிறது.

மேலும் ஒரு நாடகத்தின் கதை முடிவை நோக்கி இருக்க வேண்டும். ஆனால் இந்த குறவஞ்சி நாடகத்தில் முதல் பகுதி ஒரு மாதிரியாகவும் இரண்டாவது பகுதி வேறு மாதிரியாகவும் இருக்கிறது. தலைவன் தலைவியோடு சேர்வதை காணமுடியாது. இதனால் இது நாடக இனமா என்ற கேள்விக்கு வழி வகுக்கும். ஆனால் குறி சொல்லும் குறத்தியை நம் சமூகம் வெறும் மனிதர்களாக பார்ப்பதில்லை. அவர்கள் கடவுளின் அருள் பெற்றவர்களாக பார்க்கிறார்கள். அவர்களின் குறி தப்புவதில்லை என்ற நம்பிக்கையும் அன்றைய காலகட்டத்தில் நிலைத்திருந்தது. அதனாலேயே தலைவன், இறைவன், மன்னர்களை புகழ அக்கதாபாத்திரத்தைப் பயன்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே குறத்தி

தலைவன் தலைவியிடம் வந்து சேர்வான் என்று குறி கூறியதனால் அவர்கள் வாழ்வில் இணைவது திண்ணம்; அதையே நாடகத்தின் முடிவாக கொள்ளப்படுகிறது. எனவே இவை நாடகத்தின் இயல்பை பெற்றுவிடுகிறது. அதே நேரத்தில் இசை அமைப்புகளான ராகம், தாளம் போன்றவையும் இவற்றில் இடம்பெற்று நடன வகைகளுக்கு உறுதுணை புரிகின்றன என்பதை அறிய முடிகிறது. மேலும் நாடகத்திற்கு உரிய கதை, கதாபாத்திரங்கள், உரையாடல்கள் ஆகியவைகளும் இடம்பெற்றுள்ளன. எனவே அவை நாடகக் கலையை தன்னகத்தே கொண்டுள்ளது எனலாம். மேலும் இலக்கிய கலை என்பது அளவில் சிறிதாக எழுதப்பெற்று அவை மனதில் முழுமையாக விரிவடைந்து அறிவை ஊட்டும் அளவில் இருக்கும் ஆனால் இக்குறவஞ்சி நாடகம் ஒன்றிற்கு மேற்பட்ட புலனுறுப்புகளால் உணரப்பட்டு நம் கண் முன்னால் முழு பிம்பம் பெற்று நம்மை உடன் பரவசப்படுத்திவிடும் எனவே குறவஞ்சி நாட்டிய நாடகம் கலை என்ற அளவில் இலக்கியக் கலையைக்காட்டிலும் உணர்ச்சியை அதிக அளவில் அளிப்பதாகவும் மேலும் உடன் அறிவை எட்டும் வகையில் இருப்பதாலும் குறவஞ்சி நாட்டிய நாடகம் குறவஞ்சி என்ற இலக்கிய நுண்ணறிவுக் கலை மேம்பட்டு குறவஞ்சி நாட்டிய நாடகம் எனும் நிகழ்த்துக்கலையாக பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது என்பது உறுதியாகிறது.

## References


Gnaanaa Kulendran, (2005) Bharatanattiyattil Tamizicaippadalgal, Tamil University, Thanjavur, India.

Perumal, A.N., (1979) Tamil Naadakam Oor Aayvu, Tamil Pathipakam, Chennai, India.

Perumal, A.N., (1980) Cinna Makipan Kuluva Natakam, International Institute of Tamil Studies, Chennai, India.

Ramasamy, T., (1990) Tamilakak kalaich celvankal, International Institute of Tamil Studies, Chennai, India.

Subramaniyan, C., (1998) Thamizh lakkiya Varalaru, Manamalar pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License